விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி
(தன்னாட்சி), விருதுநகர்.
தேசிய தர மதிப்பீட்டின் கீழ் 'A+' அந்தஸ்து பெற்றது

* * * * *

ESTD : 1947

1947-2027 Estd: 1947

22-10-2026

அறிவிப்பு

அனைத்து இளநிலை (UG) மாணவ,மாணவியர்களுக்கு 26-10-2026ம் தேதி திங்கட்கிழமை அன்று (I Day Order) காலை 9.30 மணிக்கு அவர்களது வகுப்பறையில் தேர்வு நுழைவுச் சீட்டு (Examination Hall Ticket) வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அனைத்து முதுநிலை (PG) மாணவ,மாணவியர்களுக்கு 26-10-2026ம் தேதி திங்கட்கிழமை அன்று (I Day Order) மதியம் 1.30 மணிக்கு அவர்களது வகுப்பறையில் தேர்வு நுழைவுச் சீட்டு (Examination Hall Ticket) வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வு நுழைவுச் சீட்டு (Exam Hall Ticket) பெறும் மாணவ/மாணவியர்கள் தாங்கள் எழுத வேண்டிய பாடத்திற்கான பாடக்குறியீடுகள் (Subject Code) அதில் சரியாக குறிக்கப்பட்டிருக்கிறதா என சரி பார்த்து வாங்கும்படியும் அதில் ஏதேனும் தவறு இருப்பின், கல்லூரி அலுவலகத்தில் திருமதி. N.மணிமாலா (Exam Section) அவர்களிடம் உடனடியாக தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு அறை நுழைவுச் சீட்டு (Exam Hall Ticket) மற்றும் அடையாள அட்டை (Identity Card) இல்லாத மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வு எழுத வரும் மாணவ/மாணவியர்கள் கல்லூரிக்கு கண்டிப்பாக **கை பேசி (Mobile Phone) மற்றும் ஸ்மார்ட் கடிகாரம் (Smart Watch)** கொண்டு வரக்கூடாது. மீறி கல்லூரிக்குள்ளோ, தேர்வு அறைக்குள்ளோ **கை பேசி (Mobile Phone) மற்றும் ஸ்மார்ட் கடிகாரம் (Smart Watch)** வைத்திருப்பவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் என இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். **அதேபோல் மாணவர்கள் சரியான முறையில் முடி திருத்தம் செய்திருக்க வேண்டும் அவ்வாறு இல்லையென்றால் கண்டிப்பாக மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

மேலும் தேர்வு எழுத வரும் மாணவ/மாணவியர்கள் விலை உயர்ந்த பொருட்களோ, லேப்டாப்களோ அல்லது அதிக பணமோ கொண்டு வர வேண்டாம் எனவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கல்லூரி முதல்வர்

பெறுநர்
துறைத்தலைவர் மூலமாக அனைத்து
மாணவ / மாணவியர்கள் வகுப்பறைச் சுற்றுக்கு